# வான்கோழி வளர்ப்பில் வெற்றி பெற்ற விவசாயி

முனைவர். ம.அ.வெண்ணிலா, முனைவர்.இரா. தங்கதுரை மற்றும் பா.ச. சண்முகம்

தருமபுரி மாவட்டம் ஒசஹள்ளிபுதூர் கிராமத்தைச் சார்ந்த விவசாயி திரு.விஸ்வநாதன் ஆவார் இவர் தனது 4 ஏக்கர் நிலத்தில் சம்மங்கி நிலக்கடலை மற்றும் சோளம் போன்ற பயிர்களை சாகுபடி செய்து வருகின்றார் விவசாயத்தில் அதிக இலாபம் பெற முடியவில்லை என்பதாலும் நீர் பற்றாக்குறையினாலும் இவர் மற்ற ஏதாவது ஒரு சுயதொழில் செய்யலாம் என முடிவு செய்தார் அச்சமயம் இவரது நண்பர் ஒருவர் வான்கோழி வளர்ப்பை பற்றி கூறினார் பிறகு இவர் வான்கோழி வளர்ப்பில் ஆர்வம் கொண்டு மேலும் பல தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்ளும் ஆர்வம் கொண்டு பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தினை அனுகினார் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளிடம் மேலும் பல தொழில்நுட்பங்களை விரிவாக தெரிந்து கொண்டு வான்கோழி வளர்ப்பினை ஆரம்பித்து கடந்த இரண்டு வருடங்களாக வான்கோழி வளர்ப்பினை செய்து வருகின்றார் இது பற்றிய இவரது அனுபவங்களை இங்கே தெரிந்து கொள்கின்றார்.

இவருக்கு கோழி வளர்ப்பில் 15 வருடங்கள் அனுபவம் உள்ளது கடந்த இரண்டு வருடங்களாக வான்கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளார் இதுவரை 10 முறை வான்கோழி வளர்த்து விற்பனை செய்துள்ளார்

ஆக்ரஹாரம் என்ற பகுதியிலிருந்து ஒரு நாள் வயதுடைய வான்கோழி குஞ்சுகளை எடுத்து வந்து 60 நாட்கள் வரை வளர்த்து பின்பு இதனை விற்பனை செய்கின்றார் அதாவது சுமார் 50 கிராம் எடையுள்ள குஞ்சுகளை வளர்த்து 4..-700 கிராம் எடை வரை வளர்த்து பின்பு விற்பனை செய்கின்றார்.

**தீவனம்**

கோழித் தீவனம் நாள் ஒன்றுக்கு ஒரு கோழிக்கு ரூ 32 /- செலவாகின்றது.

இரண்டு கொட்டகையில் வான்கோழி குஞ்சு வளர்க்கின்றார் 75 அடி X 17 அடி நீள அகலம் என்றளவில் இரண்டு கொட்டகை அமைத்துள்ளார் ஒவ்வொரு கொட்டகையிலும் சுமார் 1500 குஞ்சுகள் உள்ளது இரண்டு கொட்டகையிலும் வெவ்வேறு வயதுடைய வான்கோழி குஞ்சுகள் விடப்பட்டுள்ளது வெவ்வேறு வயதுடைய கோழிக் குஞுசுகள் உள்ளதால் எப்போதும் இவ்விடம் வான்கோழிகள் கிடைக்கும் 60 நாட்கள் முடித்து அதனை விற்பனை செய்தார் 5 நாட்கள் இடைவெளி விடப்படுகின்றது கொட்டகை சுத்தம் செய்து பின்பு தரைதளத்தில் தேவையானவற்றை இட்டு கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்து அடுத்த முறை வான்கோழி வளர்ப்பிற்கு தயார் செய்கின்றார் அடுத்த 60 நாட்கள் வான்கோழி வளர்ப்பு முடிந்தவுடன் பிறகு மீண்டும் 5 நாட்கள் இடைவெளி விட வேண்டும்.

சூநாய் தடுப்பு மருந்துகள்/ தடுப்பூசிகள் போன்றவற்றை வான்கோழிகளுக்கு அளிக்கின்றனர்இறப்பு விகிதம் 3 சதவீதம் ஆகும் 60 நாட்கள் /2 மாதம் வளர்த்து பின்பு விற்பனை செய்கின்றார்.

**நோய் மேலாண்மை**

IBD லெள்ளைக் கழிச்சல் மற்றும் கழிச்சல் போன்ற நோய்கள் சாதாரணமாக பெரிதும் வான்கோழிகளை தாக்குகின்றது இதற்கு நோய் எதிர்ப்பு மருந்துகள் லெக்சின் போன்றவற்றை அளித்த கட்டுப்படுத்தப்படுகின்றது.

**வரவு**

**செலவு**

வான்கோழிக் குஞ்சுகள் ரூ 30 /-குஞ்சு 1500 X 30 = 45000 /-

வான்கோழி தீவன செலவு @ 1 கி /குஞ்சு

32 X 1500 = 48000 /-

தடுப்பூசி @ ரூ2.50 /குஞ்சு

2.50 X 1500 = 3750 /-

தரைத்தளம் அமைக்க = 200 /-

= 96950 /-

இறப்பு விகிதம் 45 கோழிகள் வருமானம் சுமார் 1455 கோழிகள் ரூ 100 /கோழி என்றளவில் 1455 X 100 = 145500 /-

= 48550 /-

இது ஒரு முறை வான்கோழி வளர்ப்பில் கிடைக்கும் இலாபம் ஆகும் சில சமயங்களில் குளிர்காலங்களில் அம்மை நோய் போன்ற நோய்கள் தாக்குதலுக்கு ஏற்படும் பொழுது இறப்பு விகிதம் அதிகமாகின்றது அப்பொழுது வருமானம் குறைய வாய்ப்புள்ளது கோடைக்காலங்களில் ஏதும் பிரச்சனை இல்லை இவர் இரண்டு மாதம் வளரத்து உள்ளூர் வியாபாரிகளிடமும் விற்பனை செய்கின்றார் மற்றும் வெளியூரிலிருந்தும் மொத்த விவசாயிகள் வந்து வாங்கி செல்கின்றநனர் இதற்கு அதிக ஆட்தேவையும் இல்லை எனவே இதனை ஒரு இலாபகரமான தொழிலாக செய்யலாம்.

தொடர்புக்கு

திரு.பி.விஸ்வநாதன்
த/ பெ பெருமாள்
ஒசஹள்ளிபுதூர்
தருமபுரி மாவட்டம் - 636 803
செல் - 9092921822

